Y.M.C.A

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    வைகாசி 26    [08-06-93]    செவ்வாய்க்கிழமை    ஓசை 110

## எயிட்சினால் ஆபிரிக்கா அழியும் அபாயம்

(பேர்லின்)

உலகில் வருடாந்தம் எயிட்ஸ் நோயினால் ஒரு லட்சம் பேர் பலியாகின்றனர். ஒன்றரைக் கோடி பேர் எயிட்ஸ் நோயாளிகளாக உலகில் இருக்கின்றனர். 2000 ஆம் ஆண்டளவில் இது நான்கு கோடியாக அதிகரிக்கும். இத் தகவல்கள் நேற்று பேர்லினில் ஆரம்பமான சர்வதேச எயிட்ஸ் மாநாட்டில் வெளியிடப்பட்டது. மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜேர்மன் ஜனாதிபதி எயிட்ஸ் நோயினால் ஆபிரிக்கப் பிரதேசம் அழியும் நிலை தோன்றியுள்ளது என்றும் முதியவர்களும் அநாதைக் குழந்தைகளுமே எஞ்சுவர் என்றும் குறிப்பிட்டார்.

ஐந்துநாள் நடக்கும் இந்த எயிட்ஸ் மாநாட்டில் 15,000 விஞ்ஞானிகள் கலந்துகொள்கின்றனர்.

# வெளிநாட்டு நல்லெண்ண தூதுக்குழு நாளை புலிகளை சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்று மாலை பலாலி வந்து சேர்ந்த ஆயர்கள், பௌத்த பிக்கு உள்ளடங்கிய நல்லெண்ணத் தூதுக்குழு இன்று காலை யாழ்ப்பாணம் வரவுள்ளனர். மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இந் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் நாளை பிற்பகல் நான்கு முப்பது மணியளவில் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து, புறூணை, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இந் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் நேற்று மாலை விமானம் மூலம், பலாலி வந்தடைந்தனர். இன்று காலை கப்பல் மூலமாக பருத்தித்துறையை வந்தடையும் இக்குழுவினர் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இம் மூன்று நாட்களில் புதன்கிழமை மாலை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர். இப்பேச்சுக்களின் போது சமாதான சூழல் உருவாக்குவது குறித்துப் பேசப்படும் எனவும் தெரியவருகின்றது.

இவ் வெளிநாட்டு நல்லெண்ணத்தூதுக்குழுவினர் தங்கியிருக்கும் வேளையில், குடாநாட்டின் பல பகுதிகளையும் பார்வையிட உள்ளதோடு, பலதரப்பட்ட மக்களுடனும் சந்தித்து பேச்சுகளை நடத்தவுள்ளனர்.

பருத்தித் துறையிலிருந்து இன்றுகாலை யாழ்ப்பாணம் வந்து சேரும் சமாதான தூதுக்குழுவினர், முதலில் ஆயர் இல்லத்தில், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர்.

மதியம்தூதுக்குழுவினர் ஆயர் இல்லத்தில் மதிய போசனத்தில் கலந்து கொள்வார்கள். பிற்பகலில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆசிரியர் மற்றும் மாணவர்களுடன் சந்திப்பு இடம்பெறவுள்ளது. தொடர்ந்தாற் போல் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் முஸ்லிம் இணக்கம் தீர்வுக்கு அதுவே வழியாம்

-ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்க்குழுக்களும் கிழக்கு முஸ்லிம்களும் தமக்குள் இணக்கப்பாட்டிற்கு வந்து தீர்வை வகுப்பதே வடக்கு கிழக்கு நெருக்கடிக்கு தீர்வு காண சிறந்தவழி என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் குழுக்களும் முஸ்லிம்களும் இத்தகைய இணக்கப்பாடொன்றுக்கு வந்தால் அதை சிங்கள கட்சிகள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் என நான் நினைக்கிறேன். வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு காணப்படக்கூடிய தீர்வு தொடர்பாக எழக்கூடிய விவகாரங்களையும் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் சொக்ஸி கையாளுவார் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்தார்.

வடமேல் மாகாண

## ஆட்சிப் பொறுப்புதராவிடின் பெரும் மறியல் போராட்டம்

-ஜி. எம். பிரேமச்சந்திரா

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையில் நாம் பெற்ற வெற்றியை அங்கீகரித்து மாகாண ஆட்சிப் பொறுப்பை ஐ. தே. க. எம்மிடம் தராவிட்டால் குருநாகலில் ஒரு பெரும் மறியல் போராட்டம் செய்வோம் என ஜ. ஐ. தே. மு. செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா எச்சரித்துள்ளார்.

ஒருநாள் மறியல் போராட்டத்தில் சகல அலுவலகங்களையும் செயற்படாது தடுப்போம். பாடசாலை மாணவர்களை வீதிக்கு அழைத்து ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டுவோம். நாம் ஒரு லட்சம் பேர் வீதியில் இறங்குவோம். அரசு முடியுமானால் எம்மை கைது செய்து சிறையில் அடைக்கட்டும் என்று பிரேமச்சந்திரா குருநாகலில் நடந்த எதிர்ப்புக் கூட்டத்தில் சவால் விட்டார்.

இந்த எதிர்ப்புக் கூட்டத்

[4ஆம் பக்கம் பார்க்க]

## நக்சலைட் போராளிக்கு புலிகள் பயிற்சியாம்

(டில்லி)

மக்கள் போர்க்குழு எனும் நக்சலைட் இயக்கத்திற்கு விடுதலைப் புலிகள் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கியதாக நேற்று முன்தினம் ஆந்திரப் பிரதேசத்தில்சரணடைந்த நக்சலைட் மகாராஷ்டிரா பிராந்திய தலைவர் ஒருவர் தகவல் வெளியிட்டதாக இந்திய ஹெரால்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமது அமைப்பின் தளபதி உட்பட 25 பேர் மகாராஷ்டிரா பிரதேசக் காடுகளில் 20 நாள் விடுதலைப் புலிகளிடம் போர்ப் பயிற்சி பெற்றதாகவும், பயிற்சி 1989இல் வழங்கப்பட்டதாகவும் சரணடைந்த நபர் கூறியதாக இப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது சரணடைந்த மேற்படி நக்சலைட் தலைவர் பொலிசார் மீது இரு தாக்குதல்களை நடத்தி 8 பொலிசாரை கொன்றவர் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சமாதானத் திட்டம் வகுப்பதே நோக்கமாம்

(கொழும்பு)

இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள சமாதானக் குழுவினர் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றியும், சமாதானம் தொடர்பாக ஒரு திட்டத்தை வகுக்கவும் இந்த விஜயத்தைப் பயன்படுத்துவார்கள் எனவும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தம்மால் ஆகக் கூடியது என்ன என்பது குறித்தும் இவர்கள் ஆராய்வார்கள் என ஏ. எவ். பி தெரிவித்தது.

வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர உதவ

ஒழுங்கு செய்துவருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது நாட்டை, மொழியை அடிப்படையாக கொண்ட போரை ஆன்மீக தலைவர்களிடையே ஏற்படும் தொடர்பு எவ்வாறு தீர்க்கும் என்று பி. பி. ஸி தனது கண்ணோட்டத்தில் கேள்வி எழுப்பியது.

இவ் வருடம் இத்தகைய பலமதகுழுக்கள் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# சாயிபாபாவை

## துப்பாக்கி சூடு

(கொழும்புத்துறை)

பூநகரி-கல்முனை இராணுவ முகாமில் குடிகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை அரியாலை, பூம்புகார் கடற்பரப்பில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த வசந்தபுரம், கொழும்புத்துறை மீனவர்கள் மீது கடும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது துப்பாக்கி வேட்டுக்களை இராணுவத்தினர் தொடர்ந்து செய்ததால் மீனவர்கள் அநேகர் தொழில் செய்ய முடியாது வலைகளையும் கடலில் கைவிட்டு விட்டு நீந்தியும், வள்ளங்களிலும் கரை வந்து சேர்ந்ததாக மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## மொகைதீனின் சகா கைது

பிரேமதாசா கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் புலனாய்வு பிரிவினர் கடந்த வெள்ளியன்று பிரேம

(4ஆம் பக்கம் பார்க்க)

களும் இத்தகைய இணக்கப் பாடொன்றுக்கு வந்தால் வடமேல் மாகாண

றும் பிரதமர் ரணில் தெரிவித்தார்.

தங்கியிருப்பர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இம் மூன்று டின் பல பகுதிகளையும் பார்வையிட உள்ளதோடு, பலதரப்பட்ட மக்களுடனும் சந்

## ஆட்சிப் பொறுப்புதராவிடின் பெரும் மறியல் போராட்டம்

-ஜி. எம். பிரேமச்சந்திரா

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையில் நாம் பெற்ற வெற்றியை அங்கீகரித்து மாகாண ஆட்சிப் பொறுப்பை ஐ. தே. க. எம்மிடம் தராவிட்டால் குருநாகலில் ஒரு பெரும் மறியல் போராட்டம் செய்வோம் என ஜ. ஐ. தே. மு. செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா எச்சரித்துள்ளார்.

ஒருநாள் மறியல் போராட்டத்தில் சகல அலுவலகங்களையும் செயற்படாது தடுப்போம். பாடசாலை மாணவர்களை வீதிக்கு அழைத்து ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டுவோம். நாம் ஒரு லட்சம் பேர் வீதியில் இறங்குவோம். அரசு முடியுமானால் எம்மை கைது செய்து சிறையில் அடைக்கட்டும் என்று பிரேமச்சந்திரா குருநாகலில் நடந்த எதிர்ப்புக் கூட்டத்தில் சவால் விட்டார்.

இந்த எதிர்ப்புக் கூட்டத்

[4ஆம் பக்கம் பார்க்க]

## நக்சலைட் போராளிக்கு புலிகள் பயிற்சியாம்

(டில்லி)

மக்கள் போர்க்குழு எனும் நக்சலைட் இயக்கத்திற்கு விடுதலைப் புலிகள் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கியதாக நேற்று முன்தினம் ஆந்திரப் பிரதேசத்தில்சரணடைந்த நக்சலைட் மகாராஷ்டிரா பிராந்திய தலைவர் ஒருவர் தகவல் வெளியிட்டதாக இந்திய ஹெரால்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமது அமைப்பின் தளபதி உட்பட 25 பேர் மகாராஷ்டிரா பிரதேசக் காடுகளில் 20 நாள் விடுதலைப் புலிகளிடம் போர்ப் பயிற்சி பெற்றதாகவும், பயிற்சி 1989இல் வழங்கப்பட்டதாகவும் சரணடைந்த நபர் கூறியதாக இப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது சரணடைந்த மேற்படி நக்சலைட் தலைவர் பொலிசார் மீது இரு தாக்குதல்களை நடத்தி 8 பொலிசாரை கொன்றவர் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சமாதானத் திட்டம் வகுப்பதே நோக்கமாம்

(கொழும்பு)

இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள சமாதானக் குழுவினர் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றியும், சமாதானம் தொடர்பாக ஒரு திட்டத்தை வகுக்கவும் இந்த விஜயத்தைப் பயன்படுத்துவார்கள் எனவும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தம்மால் ஆகக் கூடியது என்ன என்பது குறித்தும் இவர்கள் ஆராய்வார்கள் என ஏ. எவ். பி தெரிவித்தது.

வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர உதவுமாறு கொழும்பு ''செடக்'' எனும்அமைபபு விடுத்தவேண்டுகோளுக்குஅமையவேமதகுருமாரின் யாழ். விஜயம் அமைந்துள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. செடக் சமூக பொருளாதார முக்கோணநிறுவனம் எனவும், இது இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் உண்மை, சமாதானம், மனிதநேயம் என்பனவற்றை கொள்கையாக கொண்ட நிறுவனம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் உள்ள ஆன்மீக தலைவர்களிடையே தொடர்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே செடக் எனும் அமைப்பு மத குழுக்களின வடபகுதி விஜயங்களை ஒழுங்கு செய்துவருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது நாட்டை, மொழியை அடிப்படையாக கொண்ட போரை ஆன்மீக தலைவர்களிடையே ஏற்படும் தொடர்பு எவ்வாறு தீர்க்கும் என்று பி. பி. ஸி தனது கண்ணோட்டத்தில் கேள்வி எழுப்பியது.

இவ் வருடம் இத்தகைய பலமதகுழுக்கள்யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# யுத்த நிலை குறித்து ஆராய ஜனாதிபதி தலைமையில் மாநாடு

(கொழும்பு)

சிறிலங்காவின் புதியஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் தலைமையில் இன்று பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்கா பதவி ஏற்ற பின்னர் பூமு அளவில் இடம் பெறவுள்ள இப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், அண்மைக் காலத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளமை பற்றியும், புலிகளின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும், இராணுவத்தின் பதில் நடவடிக்கை பற்றியும் ஆராயப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கூட்டத்தில் புலிகளின் பல் வேறு செயற்பாடுகள் குறித்து அதிகாரிகள் ஜனாதிபதிக்கு விளக்கமளிப்பா

விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்தில் எல்லைக் கிராமப் பகுதிகளிலும், வடக்கில் தந்திரிமலைப்பகுதியிலும் தாக்குதலை அதிகரிக்க திட்டமிட்டு வருவதாக பாதுகாப்பு அதிகாரிகள் கருதுவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் நிலவிய பதற்ற நிலையின்போது படையினர் கொழும்புக்கு அனுப்பி வைத்ததை சாதகமாகக் கொண்டு விடுதலைப்புலிகள் சுமார் ஆயிரம் போராளிகளை திருமலைக்கு நகர்த்தியுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அதிகாரியொருவர் கொழும்பில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்குப் பகுதியின் எல்லைப் பகுதிகளில் தமது முன்னணி

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாயிபாபாவை கொல்ல முயற்சி

### சம்பவத்தில் ஆறு பேர் பலி

[டில்லி]

நேற்று முன்தினமிரவு புட்டபர்த்தியில் சத்திய சாயி பாபாவை [வயது67] கொல்ல எடுக்கப்பட்ட முயற்சியிலிருந்து அவர் தப்பிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது சாயிபாபாவை கொல்ல நான்கு இளைஞர்கள் முயற்சித்ததாகவும் எனினும் இது கைகூடவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நால்வரும் சாயிபாபாவின் பிரசாந்தி நிலையத்தில் அவரைக் குத்திக் கொல்ல எடுத்த முயற்சியின் போது அங்கு நடைபெற்ற மோதலில் சாயிபாபாவின் பக்தர்களான இரு மெய்க்காவலர்கள் பலியாகினர். இதைத் தொடர்ந்து அப் பகுதிக்கு விரைந்த பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அந்த நான்கு இளைஞர்களும் கொல்லப்பட்டதாக பி. ரி. ஐ. செய்திஸ் தாபனம் தெரிவித்தது.

இவ் இளைஞர்கள் நால்வரும் முன்னதாக புட்டபர்த்திக்கு சென்று தாம் சாயிபாபாவை தரிசிக்க இருப்பதாக கூறினர். இவர்களுக்கு அனுமதி மறுக்கப்படவே அவர்கள் அங்கு நின்ற சாயிபாபாவின் தனிப்பட்ட உதவியாளர்களையும் மூன்று பக்தர்கலளயும் பலவந்தமாக த்ள்ளிவிட்டு சாயிபாபாவை நோக்கி விரைய முற்பட்டனர். அப்போதே அவர்களை தடுத்து நிறுத்த முயன்ற பக்த மெய்க்காவலர்கள் தாக்கப்பட்டதாகவும், அதில் இரு பக்தர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இதே சமயம் சாயிபாபாவின் பக்தர்களை கொன்றதைத் தொடர்ந்து இந் நால்வரும் ஓர் அறையினுள் புகுந்து கொண்டு விட்டதாகவும் பின்னர் இவர்களை பொலிசார் கைதுசெய்து கொண்டுசெல்லும் போது பொலிசாரை இவர்கள் தாக்க முயற்சித்த போது பொலிசாரால் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் மற்றுமோர் செய்தி தெரிவித்தது.

சாயிபாபாவை கொல்ல முயற்சித்த சம்பவம் தொடர்பாக விசாரணையை ஆந்திர மாநில அரசு குற்றப்புலனாய்வு துறையிடம் ஒப்படைத்துள்ளது. உடன் விசாரணையை ஆரம்பிக்கும்படி மாநில அரசு சி. ஐ. டியை பணித்துள்ளது.

குடாநாடு மீது தாக்குதல்

## கொப்பேகடுவ முன்னரே திட்டமிட்டிருந்தார்

### நீதி விசாரணை குழுமுன் சாட்சியம்

(கொழும்பு)

லெப். ஜெனரல் கொப்பேகடுவவும், மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்னவும் அராலித்துறையில் கொல்லப்படுவதற்கு முன் பலாலியில் குடாநாட்டின் மீது எடுக்கவிருந்த இரு இராணுவ நடவடிககைகள் குறித்து ஆராய்ந்தனர். ஜயசங்கர. ஜயசக்தி என அந்த இரு நடவடிக்கைகளுக்கும் பெயரிடப்பட்டது. இவ்வாறு அராலித்துறைச் சமபவம் தொடர்பாகச் சர்வதேச நீதிபதி விசாரணைக் குழு முன் சாட்சியமளித்த பிரிகேடியர் திலகரட்ன கூறினார்.

கொப்பேகடுவவிற்கு ஜனவரியில் பதவி உயர்வு காத்திருந்தது. விமலரட்ன இந்தியாவிற்கு விஜயம் செய்யவிருந்தார். இரு ஜெனரல்களும் வெளியே செல்ல முன் இந்த இரு இராணுவ நடவடிக்கைகளையும் செயற்படுத்த இருந்தனர். இது குறித்த விபரங்கள் எனக்குத் தெரியாது என்றும் பிரிகேடியர் திலகரட்ன மேலும் தெரிவித்தார்.

## பிரேமா கொலையில் பல விடயத்தில்தெளிவில்லை

(கொழும்பு)

பிரேமதாசா கொல்லப்பட்ட ஆமர்வீதி குண்டு வெடிப்பு சம்பவத்தை யாரும் தனி நபர்கள் வீடியோ படம்பிடித்தனரா? சம்பவ தினம் அவ் விடத்தில் தற்கொலைப்படை வீரருக்கு இரகசிய குழு ஏதும் உதவி செய்ததா? சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் உயிருடன் தப்பிச்சென்றனரா? ஆகிய விடயங்களே ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக விசாரணையில் இன்னமும் தெளிவு படுத்தப்படவேண்டிய விடயங்களாக உள்ளதாம். இத்

[4ஆம் பக்கம் பார்க்க]

## பூநகரி பாதை விவகாரம்

# ஐ. நா. அதிகாரி - புலிகள் இன்று பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

பூநகரி-சங்குப்பிட்டி பாதை விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் விடுதலைப் புலிகளுக்கும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு பீற்றர் நிக்கலஸ் இற்கும் இடையில் இன்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான உணவுப்பொருள்களை பூநகரிப் பாதை ஊடாக எடுத்துவருவது தொடர்பாக அண்மையில் திரு நிக்கலஸ் இற்கும் சிறிலங்கா அரசப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இப் பேச்சுவார்த்தையின்போது சிறிலங்கா அரசு முன்வைத்துள்ள நிபந்தனைகள் குறித்தே திரு. நிக்கலஸ் விடுதலைப் புலிகளுடன் ஆராயவுள்ளார் என தெரியவருகிறது.

இது தொடர்பான பேச்சு

(4ஆம் பக்கம் பார்க்க)

## முகலன் வீதி துப்பாக்கி ஸ்கொட்லன்ட் யார்ட்டிற்கு

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து முகலன் வீதியில் கிடந்த இளைஞனின் சடலத்திற்கருகில் காணப்பட்டகைத்துப்பாக்கியை ஸ்கொட்லன்ட் யார்ட் ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்க கொழும்பு மேலதிக நீதிபதி அனுமதித்துள்ளார்.

தற்போது இரசாயன பகுப்பாய்வாளரிடம் இருக்கும் இரு வெற்று தோட்டாக்கள், பயன்படுத்தப்படாத பத்து ரவைகள், லலித்தின் உடம்பில்

[4ஆம் பக்கம் பார்க்க]

## 700 தபால் பொதிகள் குமாரியில் வந்தன

### பென்சன் வவுச்சர்களும் வந்தன

(நெல்லியடி)

கொழும்பிலிருந்து புறப்பட்ட குமாரி கப்பல் நேற்றுக் காலை 10 மணிக்கு பருத்தித்துறையை வந்து சேர்ந்தது. இக்கப்பலில், யாழ். அரச அதிபருக்கு, மே, யூன் மாத பென்சன் வவுச்சர்களும், தேசிய அடையாள அட்டைகளும், தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் படிவங்களும், உணவுப் பொருள்களும், யாழ். தனியார் வர்த்தகர்களுக்கு சில்லறைப் பொருள்களும், யாழ். தபால் திணைக்களத்திற்கு சுமார் 700 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டன.

பொருள்களின் விபரங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விபுலாநந்தர்**

இன்றும் கேட்கும் குரல் விபுலாநந்தர் விபுலாநந்த அடிகளின் நூற்றாண்டு நினைவு வெளியீடு. விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-6716)

**உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்**

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள் றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6733)

**தவறிவிட்டது**

சி வைத்திலிங்கம் 372631 627 V இலக்கமுள்ள அடையாள அட்டை தவறிவிட்டது கோப்பாய், கைதடி நாவற்குழி பகுதிகளில் கண்டெடுத்தவர் தயவு செய்து கீழுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் ஜெசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலி. (5102)

### சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

பல்லேகல இராணுவ முகாம் தாக்குதல் சந்தேக நபரான பல்கலைக்கழக மாணவர் சற்குமார் கோஸ்தா கொழும்பு உயர் நீதிமன்ற நிதிபதி எவ். என் டி ஜெயசூரியாவினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அரச தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில்லை என்று தெரிவித்தின் பேரிலேயே நீதிமன்றத்தால் எதிரி விடுவிககப்பட்டார்.

1987 ஏப்ரல் முதலாம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்குமிடையில் எதிரி சற்குமார் கோஸ்தாவும் மற்றவர்களும் பல்லேகல முகாமைத் தாககி ஆயுதங்களைக் கைப்பற்றச் சதி செய்ததாகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ் வழககில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள்பற்றி வாதி தரப்பிற்கு விபரம் எதுவும் தெரியாதுஎன்பதும் குறிப்பிடத்தக்கது.


அதேவேளை 1987 ஏப்ரல் 15 ஆம் திகதி சற்குமார்

**1000க்கு மேற்பட்ட புத்திசாலிகளின் வரிசையில் நீங்களும் இடம்பெற விரும்புகிறீர்களா?**

# நவீன தொழில் நுட்பத்துடனான இரட்டைச் சூட்டடுப்புக்கள்

விறகுத்தட்டுப்பாடு–
விறகு விலையேற்றம் – போன்ற
பிரச்சினைகளுக்கு தீர்வுகாண
இதோ!

**இரட்டைச் சூட்டடுப்பு**



❋ உடனடிப்பலன் தருவதால் இப்போது குடா நாடெங்கும் வெகுவேகமாக கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

சமையலின்போது கரியில்லாதபுகையில்லாத இந்தநவீன இரட்டைச் சூட்டடுப்புக்கள் உங்கள்சமையலின் நேரத்தைமீதமாக்குகின்றது.

❋ ஊதாமலே எரிவதுடன் தீப்பொறிகள், விறகு வீழ்தல் போன்றவற்றிலிருந்து உங்களுக்கு பாதுகாப்பினைத் தருகின்றது.

❋ விறகுக்கான செலவில் 50 வீதம் மீதப்படுத்தும் இரட்டைச் சூட்டடுப்புகளை,

- வீடுகள்
- உணவுச்சாலைகள்
- பாடசாலை விடுதிகள்
- கோயில் மடங்கள்

போன்ற எந்த இடமாக இருந்தாலும் கட்டிப்பயன் பெறலாம்.

## எனவே எதற்கும் யோசிக்காமல்


★ நீங்கள் செய்ய வேண்டியது மிகச் சுலபமான ஒரே ஒரு செயற்பாடு தான்

★ பின்வரும் நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் உங்கள் பெயர் விலாசத்தினையும் எந்தத் திகதியில் அடுப்பு கட்டித்தரப்படவேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள்.

★ அந்தத் திகதியில் இரட்டைச் சூட்டடுப்பு உங்கள் வீட்டுக்கு வந்து விடும்.

தொடர்பு முகவரிகள் :

சக்திப் பகுதி,
தமிழீழ பொருண்மியமேம்பாட்டுக்கழகம்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.



சுண்ணாம்பு விற்பனை நிலையம்
உட்கட்டுமானப் பகுதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்,

உதவும் கரங்கள்
அர்ச்சனா வீதி, (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்டம்
மாவட்ட அலுவலகம்
த.பொ.மே. கழகம்
யாழ் மாவட்டம்
கோண்டாவில்.

## சுருட்டு தயாரிப்பாளர்கள் கவனத்திற்கு

வட மாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்க தீர்மானத்திற்கு அமைய இதுவரை காலமும் உறுப்புரிமை பெறாத சகல சுருட்டு தயாரிப்பாளர்களும் எமது சங்கத்தில் பதிவு செய்து உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

உப்புமடம் சந்தி, த. குணரட்ணம்
கோண்டாவில். செயலாளர்
7-6-93 (5101)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**பழனி நாகராஜா**

(முன்னாள் பெற்றோலியம் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

பிறப்பு: 29-01-1934 இறப்பு: 9-5-1993

அன்புத் தெய்வமே அப்பாவே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் முடிவடைகின்றன. உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை தினமும் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து சிறப்புற நடத்திய அனைவருக்கும்,

எமது நன்றிகள்!

உரும்பராய் வடக்கு, மனைவி, பிள்ளைகள்,
உரும்பராய். (5049) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-08

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி முறிகண்டி, முரசுமோட்டை, உருத்திரபுரம் கணேசபுரம், திருநகர்ப் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட 25 தமிழர்கள்,

உயர் நீதிமன்ற நீதிபதி எவ். என் டி ஜெயசூரியாவினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அரச தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில்லை என்று தெரிவித்ததின் பேரிலேயே நீதிமன்றத்தால் எதிரி விடுவிககப்பட்டார்.

1987 ஏப்ரல் முதலாம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்குமிடையில் எதிரி சற்குமார் கோஸ்தாவும் மற்றவர்களும் பல்லேகல முகாமைத் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றச் சதி செய்ததாகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ் வழககில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள்பற்றி வாதி தரப்பிற்கு விபரம் எதுவும் தெரியாதுஎன்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை 1987 ஏப்ரல் 15 ஆம் திகதி சற்குமார் கோஸ்தா பல்லேகல முகாம் மீது தாக்குதல் நடத்தி ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது அவசரகாலச் சட்டங்களின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது

### ஆட்கொணர்வு மனுத் தாக்கல்

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இருவரை விடுதலை செய்யக்கோரி ஆட்கொணர்வு மனுக்கள் மேன்முறையீட்டு நீதியன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சித்தாண்டி மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இளையதம்பி பொன்னுத்துரை, வந்தாறுமூலையைச் சேர்ந்த சபாபதி தங்கவேல் ஆகியோர் சார்பிலேயே மேற்படி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### சென்றலைட்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் சென்றலைடஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்டமட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ''டொனால்ட்'' கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக் கழகம் இம்முறை வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் பல்கலைக் கழக அணி 47 4 ஓவர்களில் 8 விக்கட்டுக்கள் இழப்புக்கு 184 ஓட்டங்களைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து விளையாடிய யாழ். சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி 38 ஓவர்களில் 4 விக்கெட் இழபபுக்கு 186 ஓட்டங்களைப பெற்று வெற்றியீட்டியது.



★ நீங்கள் செய்ய வேண்டியது மிகச் சுலபமான ஒரே ஒரு செயற்பாடு தான்

★ பின்வரும் நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் உங்கள் பெயர் விலாசத்தினையும் எந்தத் திகதியில் அடுப்பு கட்டித்தரப்படவேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள்.

★ அந்தத் திகதியில் இரட்டைச் சூட்டடுப்பு உங்கள் வீட்டுக்கு வந்து விடும்.

தொடர்பு முகவரிகள் :

சக்திப் பகுதி,
தமிழீழ பொருண்மியமேம்பாட்டுக்கழகம்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.



சுண்ணாம்பு விற்பனை நிலையம்
உட்கட்டுமானப் பகுதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்,

உதவும் கரங்கள்
அர்ச்சனா வீதி, (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்டம்
மாவட்ட அலுவலகம்
த.பொ.மே. கழகம்
யாழ் மாவட்டம்
கோண்டாவில்.

**வலிகாமம்**

கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்,
வலிகாமம் கோட்டம்
புத்தூர் வீதி,
சுன்னாகம்.

வட்டத் தொடர்பாளர்
அலுவலகம் (கோப்பாய்)
சுன்னாகம் வீதி,
புத்தூர் சந்தி,
புத்தூர்.

வட்டத்தொடர்பாளர்
அலுவலகம் (உடுவில்)
மானிப்பாய் வீதி,
மதவடி.
உடுவில்

வட்டத் தொடர்பாளர்
அலுவலகம் (சண்டிலிப்பாய்)
கடடுடைச் சந்தி.
மானிப்பாய் மேற்கு

வட்டத் தொடர்பாளர்
அலுவலகம் (சங்கானை)
பிரதான வீதி,
சங்கானை.

வட்டத் தொடர்பாளர்
அலுவலகம்,
நல்லூர்,
பொற்பதி வீதி,
கொக்குவில்,
நல்லூர்.

**வடமராட்சி**

கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்,
வடமராட்சிக் கோட்டம்
மாலு சந்தி.
நெல்லியடி.

வட்டத்தொடர்பாளர்
அலுவலகம் (பருத்தித்துறை)
கந்தமுருகேசனார்
சிலையடி, பிரதான வீதி,
மந்திகை

வட்டத்தொடர்பாளர்
அலுவலகம் (கரவெட்டி)
யாழ் வீதி,
நெல்லியடி,
கரவெட்டி

**தீவகம்**

கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்.
தீவகக்கோட்டம்
நாவலர் வீகி.
யாழ்ப்பாணம்.

வட்டத்தொடர்பாளர்
அலுவலகம் (தீவகம்)
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

**தென்மராட்சி**

வட்டத் தொடர்பாளர்
அலுவலகம் (கொடிகாமம்)
கோட்ட செயலகம்
கொடிகாமம்

வட்டத் தொடர்பாளர்
அலுவலகம் (கைதடி)
ஆயுர்வேத வைத்தியசாலை
முன்பாக, கைதடி தெற்கு,
கைதடி.

கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்,
தென்மராட்சிக் கோட்டம்
கொடிகாமம்.

வட்டத்தொடர்பாளர்
அலுவலகம் (பளை)
பளை நகரம்,
பளை.

வட்டத்தொடர்பாளர்
அலுவலகம் (சாவகச்சேரி)
இலங்கை வங்கி அருகாமை,
பிரதான வீதி,
சாவகச்சேரி,

கடற்புலிகள் மாவட்டம்

**கோகுலம், கால்நடை உணவு உற்பத்தி நிலையம்**
ஊறணி, வல்வெட்டித்துறை.

நிறுவனங்கள்:

முகாமையாளர்
**காமதேனு விவசாயக் கால் நடை பண்ணை**
சுன்னாகம.

முகாமையாளர்
**மதுரம் பேக்கறி**
பலாலி வீதி, உரும்பராய்.

முகாமையாளர்
**தேன் துளி**
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

முகாமையாளர்
**லெப். செங்கண்ணன் விளைபூமிப் பண்ணை**
நீர்வேலி.

முகாமையாளர்
**காமாட்சி இரும்புத் தொழிலகம்**
நீர்வேலி.

முகாமையாளர்
**உதயம் அங்காடி,**
ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம்.

(சி-6787)


29-01-1934 5-5-1993

அன்புத் தெய்வமே அப்பாவே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் முடிவடைகின்றன. உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை தினமும் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து சிறப்புற நடத்திய அனைவருக்கும்,

எமது நன்றிகள்!

உரும்பராய் வடக்கு, மனைவி, பிள்ளைகள்,
உரும்பராய். (5049) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-06-08

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி முறிகண்டி, முரசுமோட்டை, உருத்திரபுரம் கணேசபுரம், திருநகர்ப் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட 25 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். விஜி ( - வில்லியம் – வவுனியா)

யாழ் - கீரிமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

குமரன் (கிட்னர் ஆனந்தவடிவேல் - கோண்டாவில் வீதி, கோப்பாய் - யாழ்.)

மட்டுநகரில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

தையிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட 11 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ் - புத்தூர்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

தாமு (கணபதி இரத்தினம் - புத்தூர் கிழக்கு, புத்தூர்- யாழ். )

1991ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அம்பலத்தடிப் பகுதியைச் சுற்றிவளைத்து மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட களுவங்கேணி - 2ஐச் சேர்ந்த பெண், களுவங்கேணி 1ஐச் சேர்ந்த கடற்றொழிலாளியான இளைஞன், வந்தாறுமூலையைச் சேர்ந்த 3 இளைஞர்கள். வந்தாறுமூலை பிரதான வீதியைச் சேர்ந்த விவசாயியான இளைஞன், இதே இடத்தைச் சேர்ந்த ஆசிரியர் உட்பட 7 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மணலாறு - குமுழமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் ஜெயகரன் (இராஜலிங்கம் நவராஜ்- கற்குடா வீதி. மட்டு. )

காதாம்பரி (திரேசமலர் வில்பிரட் - 74, பழைய பூங்கா வீதி. சுண்டிக்குளி - யாழ். )

மணலாறு - தங்கபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் நேசன் [தியாகலிங்கம் மோகன்பாபு - 5-ம் கட்டை, அலம்பில் – மணலாறு)

மணலாறு காட்டுப்பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரின் விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

குயில்மொழி (ரசிதா வேலுப்பிள்ளை - பெரியமடு, நெடுங்கேணி - மணலாறு)

சந்திரமதி (புஸ்பராணி அரியராசா - கோப்பாபுலவு முள்ளியவளை - முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6786)

## சிந்தனைக்கு

யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல்,
அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்.
- மாஓ சே துங்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## முன்னாள் ஜனாதிபதியின் பிரத்தியேக சிந்தனை

"புலிகளை எப்படியாவது வெற்றி பெற்றே ஆக வேண்டும் என நான் உறுதி பூண்டேன், இதன் பின்னரே நான் இந்திய இராணுவத்தை அழைத்தேன். அதற்கு நான் ஒருபோதும் வெட்கப்பட மாட்டேன்."

"யுத்தம் வேறு, அரசியல் வேறு. அரசியலையும், யுத்த நடவடிக்கைகளையும் ஒன்றாக கலந்து கொள்வதற்கு எங்களால் முடியாது. அதில் ஒன்று வன்முறையில் இருந்து வேறுபட்டது. அரசியலில் தோல்வி கண்டால், எதிர்க்கட்சித் தலைவராக வேனும் வரலாம். மற்றது வன்செயல் கொண்ட யுத்தத்தில் தோல்வி கண்டால் ஆறடி மண்ணின் கீழே போக வேண்டியதுதான்".

இவை அரசியலில் இருந்தும், சமூக நடவடிக்கைகளில் இருந்தும் ஓய்வு பெற்றதாக அறிவிப்புக்கள் விடுத்த வண்ணம், அரசியல் குறித்து வியாக்கியானம் செய்யும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனாவின் கூற்றுக்கள் ஆகும்.

ஜே. ஆர். ஜெயவர்தனா கூறுவது போன்று அரசியலும் - யுத்தமும் வேறுபட்டவையாக இருக்கலாம். ஆனால், அரசியலே யுத்தங்களுக்குக் காரணமாகின்றன. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. இன்று இலங்கையில் நடைபெறும் யுத்தம் சிங்களப் பேரினவாத சிந்தனையாலும் உருவானது. சிங்களப் பேரினவாத அரசியலும், இன ஒடுக்குமுறையும் தமிழரை ஆயுதப் போராட்டத்திற்குள் தள்ளியது. பின்னர் இலங்கையில் யுத்தமே அரசியலானது. யுத்தத்தைத் தவிர்த்து அரசியலைப் பார்க்க முடியாத நிலை உருவாகியது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்தனா சிலவேளை இது குறித்து பிழையான கற்பிதத்தைக் கொண்டிருக்கலாம். அதன் காரணமாகவே அவர் யுத்தத்தில் மட்டுமல்ல, அரசியலிலும் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலை ஏற்பட்டது. யுத்தம் வேறு, அரசியல் வேறு என்ற அவரது நிலைப்பாடே வடக்கு - கிழக்குப் பகுதிக்கு இந்திய இராணுவத்தை அனுமதித்த . ஆனால், தென்னிலங்கை அரசியலில் அது ஏற்படுத்திய கொந்தளிப்பு

# ஜெனரலின் உயிரைப் பறித்தது நிலத்தில்புதைக்கப்பட்ட குண்டுதான்

## விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியம்

[கொழும்பு]

நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தமையினாலேயே, மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ, பிரிகேடியர் விமலரட்ன போன்றோர் பயணம் செய்த வாகனம் சிதறியதும், பயணம் செய்தோர் கொல்லப்பட்டதுமான நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இவ்வாறு ஜெனரல் கொப்பேகடுவ உட்பட ஒன்பது மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஆணைக் குழுவின் முன்பாக சாட்சியமளித்த சிறிலங்கா அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தைச் சேர்ந்த சரத் குணதிலக்கா தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், கொழும்பு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தை பெற்றுக்கொண்டதான் இங்கிலாந்தில் இருக்கும் கிளாஸ்கோ பல்கலைக் கழத்தில் நீதி விசாரணைக் குரிய விஞ்ஞானம் தொடர்பாக பயின்று முதுநிலைப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதாகவும், அயரிஷ் குடியரசு இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்கான இடங்களிலும், வாகனக் குண்டுகள் மற்றும் நிலக்கண்ணிவெடிகள், மோட்டார் தாக்குதல் போன்றவற்றிலும் அவதானங்கள் செலுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் வெடிப்பொருள்கள் மற்றும் வெடிப்பொறிகள் என்பவற்றிலும் தனக்கு அனுபவம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், சம்பவம் இடம் பெற்ற அராலித்துறைப் பகுதிக்கு ஆகஸ்ட் 19ஆம் திகதி விஜயம் செய்து பரிசீலனை செய்தேன். அங்கு ஒரு மீற்றர் ஆழமுடைய குழி ஒன்று இருப்பதைக் கண்டேன். அக்குழியின் விட்டம் இருவேறு திசைகளில் அளக்கப்பட்ட போது அது முறையே 3.7 மீற்றர் ஆகவும் 3 .2 மீற்றர் ஆகவும் இருக்கக் காணப்பட்டது. அக்குழியில் சொரியலாகக் காணப்பட்ட மண்ணை அகற்றிய பின்பு குழியின் ஆழத்தை அளந்தபோது 1.5 மீற்றராக அது இருந்தது. அக்குழியிலிருந்து 20 பெரிய உலோகத் துண்டுகளும் 20 சிறிய உலோகத் துண்டுகளும் எடுக்கப்பட்டன. இந்த உலோகத் தகடுகளின் ஒரு புறத்தில் அலுமினியப்பூச்சு போன்று மறு புறத்தில் பச்சை வர்ணப் பூச்சும் காணப்பட்டது.

இத்தருணத்தில் குறுக்கிட்ட அரச தரப்பு சட்டத்தரணி அந்தத்துண்டுகள் இப்போதும் பார்வைக்குரியவையாக உள்ளதா? எனவினாவினர். இதற்கு ஆம் என்று பதிலளித்த சாட்சி அவற்றை நீதிபதிகள் முன் சமர்ப்பித்தார்.

இவற்றில் ஓர் உலோகத் துண்டில் சில எழுத்துக்கள் காணப்பட்டன. அவை ஆய்வு கூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது J. 668 என்று இருக்கக் காணப்பட்டது.

இதே வகையான குண்டுகள் ஆய்வுகூடங்கள் எதிலும் தயாரிக்கப்படுவன அல்ல என்பது எனக்குத் தெளிவாகத் தெரியும் என்று குறிப்பிட்ட சாட்சி மேலும் கூறுகையில், முன்பு கண்டெடுக்கப்பட்ட இதே வகையான குண்டுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து பரிசீலனை செய்ததாயும் தெரிவித்தார்.

குண்டு வெடிப்பு நேரிட்டதால் ஏற்பட்ட குழியிலிருந்து வயர்த்துண்டுகள் எவையும் மீட்கப்படவீல்லை. அக் குழியை படம் பிடித்துக்கொண்ட பின்பு அங்கிருந்து வேலணை முகாமிற்கு திரும்பினேன். அங்குதான் கண்ணிவெடியில் சிக்கிய லான்ட் ரோவர் 110 ரக 8752 இலக்கமுடைய வாகனம் நின்றிருந்தது. அதனைப் பரிசீலித்தேன். வலப்பக்கத்தின் பின்புறம் மிகவும் சேதம் அடைந்திருந்தது. பின் அச்சு மேல்நோக்கி முறுக்கப்பட்டிருந்த வாகனத்தின் பின்புறம் நோக்கி வளைக்கப்பட்டிருந்தது. வலப்புற ரயரும் றிம்மும் காணப்படவில்லை. வலப்புற அடித்தட்டும் அதனுடன் இணைந்த பார்களும் சிதறிப்போயிருந்தன.

எனது எல்லாப் பரிசோதனைகளையும் முடித்துக் கொண்ட பின்புதான் முடிவுக்கு வந்தேன். வசாவிளான் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இதேபோன்ற அமுக்கக் குண்டு ஒன்றுடனும்ஒப்பிட்டுப் பார்த்தேன் என்று கூறிய சாட்சி அதனை நீதிபதிகள் முன்பு காட்டியதோடு அதன் தொழில் நுட்பத்திறன்கள் குறித்தும் விளக்கினார்.

இவை எல்லாவற்றிலும் அடிப்படையிலும் 25-08-92 அன்று தனது அறிக்கையை பூரணப்படுத்தியதாகக் கூறிய சாட்சி லாண்ட்ரோவர் 110 ரக 8752 இலக்கமுடைய வாகனம் நிலத்துக்கடியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியிலேயே சிக்கியது என்றும், இக் குண்டு வெடிப்பதற்கு தேவையான டெட்டனேற்றர் சக்தி வாகனத்தின் நிறையினால் ஏற்படும் அமுக்கத்திலிருந்து கிடைத்திருக்கும் என்றும் தான் முடிவுக்கு வந்ததாகக் குறிப்பிட்டார்.

## பாடசாலை மாணவர்கள் நீர்கொழும்பில் கடத்தல்

(கொழும்பு)

நீர்கொழும்பு பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் ஏழு மாணவர்கள் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பிலுள்ள லுணுகல பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆண்டெட்டில் கல்வி பயின்ற சுவிந்த, பிரசாத், கமல், டிலந்த, ஜயந்த, சுசீல், ரவி ஆகிய ஏழு பேருமே காணாமல் போயுள்ளதாகவும் இவர்கள் அடையாளம் காணப்படாத சிலரினால் வாகனமொன்றில் கடத்திச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்கள் ஏழு பேரும் றாகம புகையிரத நிலையத்திலிருந்து அனுராதபுரம் நோக்கி செல்லும் ரயிலில் ஏறியதாக கிடைத்த தகவலை அடுத்து இவர்கள் அனுராதபுரம் சென்றிருக்கலாம் என பொலிசார் நம்புகின்றனர்.

இத்தகவலை தொடர்ந்து இவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் பொருட்டு நீர்கொழும்பு பொலிசார் அனுராதபுரம் வரையிலான சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அவசர தகவல்களை அனுப்பியுள்ளனர்.

## நளின் பதவியில் நீடிக்க பல்கலை ஆசிரியர் ஆதரவு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட பேராசிரியர் நளின் டி. சில்வாவை, பல்கலைக் கழகங்கள் ஆசிரியர் சம்மேளனத்தின் தலைவர்பதவியில் அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டம் வரை தொடர்ந்து இருக்கும்படி சம்மேளனம்கேட்டுள்ளது.

பேராசிரியர் நளின் டி. சில்வா கொழும்பு பல்கலைக் கழக நிர்வாகத்தினால் ஏப்பிரல் 23இல் வேலை நீக்கம் செய்யப்பட்டார். வேலை நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து அவர் தான் வகித்து வந்த பல்கலைக்கழகங்கள் ஆசிரியர் சம்மேளனத்தின் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட சம்மேளனத்தின் ஐந்து பேர் கொண்ட உப-குழு அவரைத் தலைவர் பதவியில் தொடர்ந்தும் இருக்கும்படி கேட்டுள்ளது. அத்துடன் பேராசிரியருக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றங்கள் நியாய பூர்வமாக நியமிக்கப்பட்டனவாஎன்றும், அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக வழங்கப்பட்டதா என்பதும் குறித்தும் உப-குழு பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

கடற் கொந்தளிப்பால்

## விளையாட்டு

யாழ் மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று மாலை நான்கு மணிக்கு புத்தூர் வீனஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு விளையாட வுள்ளது. இதற்கு முன்பாக மூன்றாம் இடத்தை தெரிவு செய்வதற்கான மற்றொரு போட்டியில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவை எதிர்த்து சங்கானை பிரதேச செயலர் பிரிவு விளையாடவுள்ளது.

யாழ் மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையேயான வலைபந்தாட்ட இறுதிப் போட்டி யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலகபிரிவு அணியை எதிர்த்து விளையாடிய தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு அணி 33க்கு 23 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு அணி கடந்த மூன்று வருடங்ளாக வலை பந்தாட்ட சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையிலான கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவை எதிர்த்து விளையாடிய கோப்பாய் பிரதேச செயலக பிரிவு 3க்கு2 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாக தெரிவானது. பெண்கள்பிரிவில் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவை எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவு 3க்கு 1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இப்போட்டிகள் மட்டுவில் மாக வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இயங்கி வரும் புங்குடுதீவு இறுபிட்டி அமெரிக்கன் மிசன் வித்தியாலத்தில் அமைக்கப்பட்டிருந்த குழாய் நீர்ப் பம் வெள்ளிக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது. (22)

## இரண்டு இந்தியக் கப்பல்கள் ஒன்றுடனொன்று மோதின

ஜே. ஆர். ஜெயவர்தனா கூறுவது போன்று அரசியலும் - யுத்தமும் வேறுபட்டவையாக இருக்கலாம். ஆனால், அரசியலே யுத்தங்களுக்குக் காரணமாகின்றன. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. இன்று இலங்கையில் நடைபெறும் யுத்தம் சிங்களப் பேரினவாத சிந்தனையாலும் உருவானது. சிங்களப் பேரினவாத அரசியலும், இன ஒடுக்குமுறையும் தமிழரை ஆயுதப் போராட்டத்திற்குள் தள்ளியது. பின்னர் இலங்கையில் யுத்தமே அரசியலானது. யுத்தத்தைத் தவிர்த்து அரசியலைப் பார்க்க முடியாத நிலை உருவாகியது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்தனா சிலவேளை இது குறித்து பிழையான கற்பிதத்தைக் கொண்டிருக்கலாம். அதன் காரணமாகவே அவர் யுத்தத்தில் மட்டுமல்ல, அரசியலிலும் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலை ஏற்பட்டது. யுத்தம் வேறு, அரசியல் வேறு என்ற அவரது நிலைப்பாடே வடக்கு - கிழக்குப் பகுதிக்கு இந்திய இராணுவத்தை அனுமதித்த . ஆனால், தென்னிலங்கை அரசியலில் அது ஏற்படுத்திய கொந்தளிப்பு அவரை ஆட்சிப் பொறுப்பில் இருந்து அவரது விருப்பத்திற்கு மாறாக ஒதுங்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்தனா தனது ஆட்சிக் காலத்தில் எப்பொழுதும், எப்படியாவது யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்பட்டார். புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரவும் அவர் தயாராக இருந்தார். இதன்படி இஸ்ரேலிய உளவுப் படையான மொசாட்டுடனும், பிரித்தானிய கூலிப்படையான கினிமினியுடனும், பின்னர் இந்தியாவுடனும் இராணுவக் கூட்டுச் சேர்ந்தார்.

இருந்தும், அவரால் யுத்தத்தில் வெற்றிபெற முடியவில்லை. இந்திய இராணுவத்தை அழைத்ததையிட்டு அவர் வெட்கப்படாமல் இருக்கலாம். ஆனால், அவரது குறிக்கோள் நிறைவேறவில்லை. அவரது அணுகுமுறை தோல்வியில் முடிந்தது. இவ்விவகாரம் அவர் யுத்தத்தில் தோற்றுப் போய்விட்டார் என்பதை வெளிக்காட்டப் போதுமானதாகும். இது இறுதியில் அவரது அரசியல் அஞ்ஞாதவாசத்திற்கு வழிவகுத்தது.

இத் தோல்வியே கடந்த நான்கு வருடங்கள் - பிரேமதாசா ஆட்சிக் காலம்-அவரை அரசியல் பற்றிப் பேசாமல் இருக்கச் செய்தது. ஜே. ஆர். ஜெயவர்தனா தான் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றதாக அறிவிக்கலாம். ஆனால், அது உண்மையல்ல. அவர் யுத்தம் குறித்து எடுத்த முடிவு, தலை தப்பினால் போதும் என்ற நிலையில் அரசியலில் இருந்து அவரை விரட்டியது. கடந்த நான்கு வருடத்தில் தனது அரசியல் நடவடிக்கைக்கு விளக்கம் கூற முடியாத நிலையை உண்டாக்கியது.

இந்நிலையிலும், ஜே. ஆர். ஜெயவர்தனா தற்பொழுது தனது பழைய கொள்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முற்படுவது அவரின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்றதா? அல்லது தனது கொள்கையை விரும்பினால் புதிய அரசாங்கம் கடைப்பிடிக்கலாம் என்ற அறிவுறுத்தலா என்று புரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் உறுதி. உள்நாட்டுப் போரையும், அரசியலையும் பிரித்தலென்பது நடைமுறைச் சாத்தியமற்றதொன்று. அவ்வாறு பிரிப்பதென்பது ஜே. ஆரின் பிரத்தியேகமான சிந்தனையாகவே இருக்க முடியும்.

## நீர்கொழும்பில் கடத்தல்

(கொழும்பு)

நீர்கொழும்பு பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் ஏழு மாணவர்கள் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பிலுள்ள லுணுகல பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆண்டெட்டில் கல்வி பயின்ற சுவிந்த, பிரசாத், கமல், டிலந்த, ஜயந்த, சுசீல், ரவி ஆகிய ஏழு பேருமே காணாமல் போயுள்ளதாகவும் இவர்கள் அடையாளம் காணப்படாத சிலரினால் வாகனமொன்றில் கடத்திச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்கள் ஏழு பேரும் ராகம புகையிரத நிலையத்திலிருந்து அனுராதபுரம் நோக்கி செல்லும் ரயிலில் ஏறியதாக கிடைத்த தகவலை அடுத்து இவர்கள் அனுராதபுரம் சென்றிருக்கலாம் என பொலிசார் நம்புகின்றனர்.

இத்தகவலை தொடர்ந்து இவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் பொருட்டு நீர்கொழும்பு பொலிசார் அனுராதபுரம் வரையிலான சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அவசர தகவல்களை அனுப்பியுள்ளனர்.

## ... ஆசிரியர் ஆதரவு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட பேராசிரியர் நளின் டி. சில்வாவை, பல்கலைக் கழகங்கள் ஆசிரியர் சம்மேளனத்தின் தலைவர்பதவியில் அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டம் வரை தொடர்ந்து இருக்கும்படி சம்மேளனம்கேட்டுள்ளது.

பேராசிரியர் நளின் டி. சில்வா கொழும்பு பல்கலைக் கழக நிர்வாகத்தினால் ஏப்பிரல் 23இல் வேலை நீக்கம் செய்யப்பட்டார். வேலை நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து அவர் தான் வகித்து வந்த பல்கலைக்கழகங்கள் ஆசிரியர் சம்மேளனத்தின் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட சம்மேளனத்தின் ஐந்து பேர் கொண்ட உப-குழு அவரைத் தலைவர் பதவியில் தொடர்ந்தும் இருக்கும்படி கேட்டுள்ளது. அத்துடன் பேராசிரியருக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றங்கள் நியாய பூர்வமாக நியமிக்கப்பட்டனவா என்றும், அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக வழங்கப்பட்டதா என்பதும் குறித்தும் உப-குழு பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

... துறை பிரதேச செயலக பிரிவு 3க்கு 1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இப் போட்டிகள் மட்டுவில் மாக வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இயங்கி வரும் புங்குடுதீவு இறுபிட்டி அமெரிக்கன் மிசன் வித்தியாலத்தில் அமைக்கப்பட்டிருந்த குழாய் நீர்ப் பம் வெள்ளிக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது. (22)

# இ. தொ. கா. திட்டமே பிரச்சினைக்கு தீர்வு

## தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படவேண்டும் என்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ள யோசனையே சிறந்த ஒரு தீர்வாகும் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது: பாராளுமன்ற தெரிவுக்குழுவை மீண்டும் மீண்டும் கூட்டுவதில் பயன் ஏதும் விளையப்போவதில்லை. தெரிவுக்குழுவிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடு இதுவே.

விடுதலைப்புலிகளும் அரசும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதை விடுத்து இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண முன்வரவேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஒருவழியாக ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற முறை மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டும் என சில சக்திகள் கூறுகின்றன. இக் கருத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. பாராளுமன்ற முறையிலான ஆட்சியின் போதே இனப்பிரச்சினை தோற்றம்பெற ஆரம்பித்தது எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர், ஜனாதிபதி ஆட்சிமுறையில் ஜனாதிபதியினால் சுதந்திரமாக தனித்து முடிவு எடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

## கட்சி விலக்கியதை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

தன்னை கட்சியிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து களுத்துறை சுதந்திரக்கட்சி எம்.பி. திலக் கருணாரட்ண உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளார்.

நான் கட்சியின் உட்கட்சி ஜனநாயகத்தை பேணுவதற்காகவே முயன்றேன். என்னை கட்சியிலிருந்து நீக்கியது தவறு என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனது பலம்மிக்க இடமான பண்டாரகம தேர்தல் தொகுதியில் இம்முறை மாகாணசபை தேர்தலில் சுதந்திரக்கட்சி அதிக வாக்குகளை பெற்றிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று திலக் கருணாரட்ண தெரிவித்தார்.

ஹெல உறுமய அமைப்பாளர்களில் ஒருவரான திலக் கருணாரட்ண கட்சிவிரோத செயலில் ஈடுபடுவதாக சுதந்திரக் கட்சியினால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே.

## வீச்சுக்கல்முனை முகாமில் அகதிகள் மீது தாக்குதல்

(செங்கலடி)

வீச்சுக் கல்முனை புனித அன்னம்மாள் ஆலய அகதி முகாமில் தங்கியுள்ள அகதிகளை அங்கிருந்து பலாத்காரமாக வெளியேற்ற பெரும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கு ஆயித்தமலை, பெரிய புல்லுமலை ஆகிய இடங்களைச்சேர்ந்த 150 குடும்பங்கள் அகதிகளாக இருக்கின்றனர். இந்த அகதிமுகாமிற்குள் புகுந்த காடையர் கோஷ்டியொன்று பெரிய புல்லுமலையைச் சேர்ந்த வாலிபர் ஒருவரையும் 11ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனையும் தாக்கியதுடன் அங்கு தங்கியிருக்கும் அகதிகள் அனைவரையும் அகதி முகாமை விட்டு வெளியேறுமாறு மிரட்டியுள்ளது.

தாக்கப்பட்ட மாணவன் மட்டக்களப்பு அரசினர்வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

## இடமாற்றம்

(கொழும்பு)

பிரதமர் பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ். எம். ஆர் சுலைமான் பாதுகாப்பு அமைச்சுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடற் கொந்தளிப்பால்

## இரண்டு இந்தியக் கப்பல்கள் ஒன்றுடனொன்று மோதின

இலங்கையின் தென்கிழக்கே தொரந்தா முனையிலிருந்து பதினைந்து கடல்மைல் தொலைவில் இந்தியாவின் சரக்குக் கப்பல்களான எம்.வி. ரவிதாஸ்ஊம், எம். வி. ரத்னதீபும் ஒன்றுடன்ஒன்றுமோதிக் கொண்டதாக கொழும்புத் துறைமுக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கொந்தளிப்பான கடலில் இவ் விபத்து கடந்த வெள்ளியன்று நடந்ததாகவும் கப்பலிருந்த ஊழியர்கள் மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த விபத்தில் இரண்டு கப்பல்களும் பலத்தசேதம் அடைந்துள்ளன.

## ஐ. தே. க வுடன் இணைவு; பேச்சுக்கே இடமில்லை

### காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

எந்த சூழ்நிலையிலும் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி ஐ. தே. க வுடன் இணையமாட்டாது. சுமார் 10 லட்சம் வாக்காளர்கள் எமக்கு வாக்களித்தது ஐ. தே. கவுடன் இணையவல்ல; மீண்டும் ஜனநாயகத்தை உருவாக்கவே என காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற மாகாண அமைப்பாளர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசிய போதே இவ்வாறு காமினி குறிப்பிட்டார்.

மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.க. பின்தள்ளப்பட்டுள்ளது. இது கட்சியின் அழிவின் ஆரம்பமே. ஐ. தே. கவின் அழிவிற்கு எமது கட்சியின் ஆரம்பமே காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்விச் சேவைகள் சபை விண்ணப்பம் கோரியுள்ளது

(கொழும்பு)

பதில் அதிபர்கள் அல்லது அதிபருக்குரிய கடமைகளைச் செய்பவர்களை நிரந்தரமாக்குவதற்கான விண்ணப்பங்கள் கல்விச் சேவைகள் சபையினால் கோரப்பட்டுள்ளன.

1993 ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் அல்லது அதிபருக்குரிய கடமைகளைச் செய்பவர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் உரிய படிவங்களைப் பிரதேச கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்று, தாம் சேவை புரியும் கோட்டப் பிரதிப் பணிப்பாளருக்கு இம்மாதம் திகதிக்கு முன் 15 ஆம் னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்படி விண்ணப்பங்களைக் கல்விச் சேவைகள் சபைக்கு இம்மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான சுற்றுநிருபம் மாகாணக் கல்வி அமைச்சுகள், பிரதேசக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஈழநாதம்

யாழ். மாவட்ட பாடசாலை

# மெய்வன்மைப் போட்டிகள் இன்றும், நாளையும்

யாழ்.மாவட்டப்பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டி இன்றும்,நாளையும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். முதலாவது நாள் காலை 8.30 மணி தொடக்கமும் இறுதி நாள் நிகழ்ச்சிகள் பிற்பகல் 1.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

இப்போட்டியில் கோட்ட மட்டத்தில் தனிநபர் நிகழ்ச்சிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற வீரர்களும், அஞ்சல் ஓட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகளும் பங்குபற்றுகின்றன.

இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்கு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு அதிதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் திரு இன்பன் கலந்து கொள்வார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில் வழங்குவார்.

அதிக புள்ளிகளைப் பெறும் கோட்டத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மத்தியகுழு உறுப்பினர் லெப். கேணல் பொன்னம்மான் நினைவு சுற்று வெற்றிக் கேடயமும், இரண்டாம் இடம் பெற்ற கோட்டத்திற்கு சுற்று வெற்றிக் கிண்ணமும், ஒவ்வொரு பிரிவு முதன்மை வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பால் அன்பளிப்பாக வழங்கப்படுகின்றன.

### பிரேமா

தகவலை பொலிசார் வெளியிட்டுள்ளனர்.

தீர்க்கப்படாத இந்த விடயங்கள் குறித்து தகவல்கள் ஏதும் யாராவது பொலிசாருக்கு வழங்கினால் ஐந்து மில்லியன் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

### 700 தபால்

மொத்தமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. சர்க்கரை 200 மூடைகள், பயறு 800 மூடைகள், அரிசி 16 500 மூடைகள். கோழித்தீன் 1000 பைக்கற்றுகள், யாழ். கல்வித் திணைக்களத்திற்கு இலவச பாடநூல் 2646 பார்சல்கள், சீனி, 20,371 மூடைகள், வொண்டர் லைற் சோப் 9250 பார்சல்கள், ராணி சோப் 13 மெ. தொன், றவை 750 மூடைகள், யாழ். மாவட்ட பேக்கரி உற்பத்தியாளருக்குரிய பொருள்கள் 1625 மூடைகள், லக்ஸ் 1000 பார்சல். சன்லைட் 1500 பார்சல், மைசூர் பருப்பு 4682 மூடைகள், தேயிலை 1072 மூடைகள், 120 சயிக்கிள் ரயர், 120 சயிக்கிள் ரியூப். லக்ஸ் பிரே பால்மா, பொருள்கள் இறக்கும் பணிகள் உடன் ஆரம்பமானது.

இதேவேளை இன்று தபால் பொதிகள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு நாளை இவை விநியோகிக்கப்படும் என தெரியவருகிறது. (30. யோ)

### மொகைதீனின்

தாசாவின் தனிப்பட்ட உதவியாளரான மொகைதீனின் நெருங்கியசகா ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர் வாழைத்தோட்டப் பகுதிக்கு அடிக்கடி வந்து செல்பவர் என்றும்பிரேமா கொலை தொடர்பானவர்களை கண் பிடிக்க இவர் உதவக் கூடும் என்றும் பொலிசார் தெரிவித்தனர். இவருடன் பிரேமதாசா கொலை தொடர்பாக கைதானவர்களின் தொகை 24 ஆக உயர்ந்துள்ளது.

### வெளிநாட்டு

றியத்தில் சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடாகியுள்ளது. அதைத் தொடர்ந்து விமானக் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட இடங்களைக் குழுவினர் பார்வையிடுவதுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்வர். மாலையில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் மத குருமாரையும், அருட்சகோதரிகளையும் மற்றும் குருமட மாணவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்கள்.

# 100 துவிச்சக்கரவண்டிகள் கொண்டு வர அனுமதி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும்கிராமசேவகர்களின் பாவனைக்கென 100 துவிச்சக்கரவண்டிகளையாழ்ப்பாணம் கொண்டு செல்ல கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 435 கிராமசேவகர்கள் பிரிவில் தற்போது 320 பேர் கடமையாற்றுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஆட்சி

தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா, காமினி திசநாயக்கா, சந்திரிகா குமாரணதுங்க, வாசுதேவ நாணயக்காரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வருடாந்த உற்சவம்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்ஸவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 6ஆம் திகதி நிறைவுறுகிறது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இரதோற்ஸவமும், 3 ஆம் திகதி சனி காலை தீர்த்தோற்ஸவமும் இடம்பெறும். உற்ஸவ காலத்தில் தினமும் மாலை சிவசக்தி மகிமைபற்றி தொடர் விரிவுரை நடாத்தப்படும்.

# சிப்பாய் மரணம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் கடந்த 2ஆம் திகதி வெலிஓயாப் பகுதியில் மிதி வெடியில் சிக்கிப் பலியானார்.

மேற்படி பகுதியிலுள்ள கஜபாகுபுர இராணுவ முகாமுக்கு அருகில் இராணுவத்தினரின் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப வெடி தற்செயலாகவெடித்ததினாலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

# 2-ம் ஆண்டின் முதலாம்நாள் நினைவஞ்சலி



## கப்டன் குவேனி

(இலகஷ்மணன் நகுலேஸ்வரி)

வீர ஜனனம்: 23-11-1972

வீரச்சாவு: 07-06-1992

(மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்)

தமிழீழ நாடமைக்கத்
தம்பியணி யிணைந்து நின்று
அமுதத் தமிழ்காத்த குமுதா!
கடல் வீரங் கண்ட பெண்புலியே!
நிமிர்ந்து நிற்கின்றோம்
நின்வழியில் தொடர்கின்றோம்
நினைவில் நீங்காதுன் பாசம்
குன்றா உன் வீரம் நினைந்து
குன்றுபோல் நிமிர்கின்றோம்.

இவருடன் மரணித்த பாரதி, பல்லவி, சுரேகா ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

(5052) — குடும்பத்தினர்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி




வாலையம்மன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட 10 ஓவர்

**மென்பந்து கிரிக்கட்போட்டி**

மேற்படி போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் 14-06-93இற்கு முன்னர் பின்வரும் இடங்களில் பதிவு செய்யவும்:

(1) அறிவகம் புத்தகசாலை(வெலிங்டன் சந்தி, யாழ் )
(2) சாம் சிவா மல்ரி சொப் (பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு சந்தி)

வாலையம்மன் சனசமூக நிலையம்,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,

வாலையம்மன்
வி. கழகத்தினர்.



விளம்பர அன்பளிப்பு:

**இ. ச. பேரம்பலம் அன் கோ.**

50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(5103)


# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 07-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9749

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

40-2249, 26-5814, 24-9609, 26-8674, 26-2297, 26-1658, 26-3518, 26-0502, 24-9489, 26-0649, 24-5939, 41-9759, 26-4443, 40-6979, 42-3945, 24-7340, 28-6853, 26-2941, 26-5351, 26-2135, 24-5703.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்:

25-9038, 28-3476, 24-5509, 24-1259, 41-2659, 24-5015, 27-2761, 26-1583. 24-8391, 24-5258, 24-5241, 26-2764, 27-5077, 24-0416, 24-1172, 42-1750,

பொலிகை மண் பெற்றெடுத்த காவியநாயகர்கள் நினைவாக!

பொலிகண்டி ஒற்றுமை வி. கழகம் நடாத்தும்

எமது கழக வீரர்களின்



# கப்டன் நேசன்

**(தியாகலிங்கம் மோகன்பாபு)**

வீரப்பிறப்பு: 1973 - 08 - 09

வீரச்சாவு: 1992 - 06 - 08

போர்கண்டு புலியாகிப்
புகழான களம கண்டு
புதுவாழ்வு நாம் வாழ
புவியிலே இடமுண்டு
என்று காட்டியவனே!
வாழ்வுண்டு வளமுண்டு
வரலாறு நமக்குண்டு
மனமுண்டு திடமுண்டு
மண்மீட்க உயிருண்டு
என்று உணர்த்தியவனே!
உன் நினைவுகளில்
எம் பயணம் தொடர்கிறது.

அலம்பில்,
முல்லைத்தீவு. (5044)

திருமதி தியாகலிங்கம்
குடும்பத்தினர்.

றும்பிரேமா கொலை தொடர்பானவர்களை கண் பிடிக்க இவர் உதவக் கூடும் என்றும் பொலிசார் தெரிவித்தனர். இவருடன் பிரேமதாசா கொலை தொடர்பாக கைதானவர்களின் தொகை 24 ஆக உயர்ந்துள்ளது.

## வெளிநாட்டு

றியத்தில் சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடாகியுள்ளது. அதைத் தொடர்ந்து விமானக் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட இடங்களைக் குழுவினர் பார்வையிடுவதுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்வர். மாலையில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் மத குருமாரையும், அருட்சகோதரிகளையும் மற்றும் குருமட மாணவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்கள்.

மறுநாள் புதன்கிழமை காலை யாழ். ஆயர் இல்லத்திற்கும் அன்று அரியாலை இடம்பெயர்ந்தோர்முகாமைப் பார்வையிட்டபின் யாழ். செயலகத்தில் அரச அதிபருடன் சந்தித்துப் பேச உள்ளார்கள். பிற்பகலில் நல்லூர் ஆதீனத்தில் இந்து சமயத் தலைவர்களுடன் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

வியாழக்கிழமை சமாதானக் குழுவினர் அறிக்கை ஒன்றைத் தயாரித்தபின் கொழும்பு திரும்பவுள்ளனர்.

## யுத்த

நிலைகளை பலப்படுத்தி இரு ராகாணங்களும் தமது கட்டுப்பாட்டில் உள்ளதாக காட்ட முயற்சித்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களில் கருதப் படுகின்றது

நிலைமையைச்சமாளிக்கஇப் பகுதிகளுக்கு படைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், படையினர் முன்னேறிச் சென்று தாக்குதல் நடத்தினாலும் தொடர்ந்து அந்தஅந்த பகுதிகளில் நிலைகொண்டிருக்க முடியாது பழைய இடங்களுக்கே திரும்ப வேண்டிய நிலை உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் மீண்டும் அந்த அந்தப் பகுதிகளுக்குள் தீவிரவாதிகள் நுழைந்து விடுகின்றனர் என அதிகாரி ஒருவர் விளக்கமளித்தார்.

## முகலன்

காணப்பட்ட தோட்டா, முகலன் வீதியில் கிடந்த இளைஞனின் உடலில் காணப்பட்ட தோட்டா ஆகியவை ஆய்வுக்காக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன

## ஐ. நா.

வார்த்தையில் ஈடுபடும் பொருட்டுதிருநிக்கலஸ்நேற்றுக்காலை விமானம் மூலம் பலாலியை வந்தடைந்தார். இன்று காலை பருத்தித்துறையூடாக இவர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

வீர ஜனனம்: 23-11-1972

வீரச்சாவு: 07-06-1992

(மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்)

தமிழீழ நாடமைக்கத்
தம்பியணி யிணைந்து நின்று
அமுதத் தமிழ்காத்த குமுதா!
கடல் வீரங் கண்ட பெண்புலியே!
நிமிர்ந்து நிற்கின்றோம்
நின்வழியில் தொடர்கின்றோம்
நினைவில் நீங்காதுன் பாசம்
குன்றா உன் வீரம் நினைந்து
குன்றுபோல் நிமிர்கின்றோம்.

இவருடன் மரணித்த பாரதி, பல்லவி, சுரேகா ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

(5052) — குடும்பத்தினர்

## 07-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9749

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

40-2249, 26-5814, 24-9609, 26-8674, 26-2297, 26-1658, 26-3518, 26-0502, 24-9489, 26-0649, 24-5939, 41-9759, 26-4443, 40-6979, 42-3945, 24-7340, 28-6853, 26-2941, 26-5351, 26-2135, 24-5703.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்:


25-9038, 28-3476, 24-5509, 24-1259, 41-2659, 24-5015, 27-2761, 26-1583. 24-8391, 24-5258, 24-5241, 26-2764, 27-5077, 24-0416, 24-1172, 42-1750,

பொலிகை மண் பெற்றெடுத்த காவியநாயகர்கள் நினைவாக!

பொலிகண்டி ஒற்றுமை வி. கழகம் நடாத்தும்

# எமது கழக வீரர்களின் வீர தீர செயல்கள்

காலம்: 10-06-93 [மாலை 5.00 மணி]




இடம்: கழக மைதானம்


## வீர நிகழ்ச்சிகள்

அன்றும். இன்றும், என்றும், மங்காப்புகழ் படைத்து புகழ் மணம் பரப்பும், பருத்தி நகர் தந்த சான்டோ M. துரைரத்தினம் அவர்களினால் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட கழக வீரர்களின் வீர தீர நிகழ்ச்சிகள்.

1, அதிபாரங்கொண்ட லொறி ஒன்றினை மார்பு மீது ஏற்றுதல். [த. தங்கேஸ்வரராஜா]
2: முள்ளாணிப் படுக்கை மேலே படுத்திருந்து மார்புமீது உழவுஇயந்திரமொன்றை ஏற்றுதல். [செ. செல்வராஜா]
3. தொண்டைக்குழிக்கு மேலாக ஆட்களுடன் கூடிய கட்டைவண்டிஒன்றை ஏற்றுதல் [ப. யோகேந்திரராஜா]
4. "நெருப்பு" புதைகுழியினுள் பலமணிநேரம் படுத்திருத்தல். [செ. ரஞ்சகுமார்]


த. தங்கேஸ்வரராஜா


செ செல்வராஜா


ப. யோகேந்திரராசா


செ. ரஞ்சகுமார்

(5104)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது